புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# புதுக்கவிதைகளில் பெண்ணியம்

**கட்டுரையாளர்;**
**முனைவர் ப. மெஹருன்னிஸா,**
**உதவி பேராசிரியை,**
**திரு. வி. க. அரசு கலைக் கல்லூரி,**
**திருவாரூர். 610 002.**

**ஆய்வுச் சுருக்கம்**

புதுக்கவிதையின் கருத்து வெளிப்பாடு மின்னல் போன்றது என்பர் கவிஞர் அப்துல்ரகுமான் புதுக்கவிதை நேரடியாகக் கருத்தைச் சொல்வது, எண்ணத்தை அதன் பிறப்பிடத்திலேயே படித்து விடுவது புதுக்கவிதை எனவும் வரையறை செய்கின்றனர், புதுக்கவிதையின் இமாலய வளர்ச்சிக்கு மணிக்கொடி எழுத்து, வானம்பாடி ஆகிய மூன்று இயக்கங்களின் பங்களிப்பு உள்ளதமானது. வானமாமலை புதுக்கவிதையின் போக்குகளை, வாழ்க்கை, சாவு, இணைவிழை உணர்ச்சி, நிராசை, தனிமனிதம், கவிஞன் தொழில், எழுத்தாளன் தொழில், படிமம், குறியீடு, உணர்ச்சி என வகைப்படுத்திக் கூறுகின்றார். மேலே கூறியவை புதுக்கவிதையின் போக்குகளாகச் சுட்டப்பட்டாலும் இவையனைத்தும் கடந்து எல்லாவற்றையும் புதுக்கவிதையால் சொல்ல முடியும் என்ற நிலை உருவாகி வருகிறது.

கலைச் சொற்கள் : புதுக்கவிதை, கவிதைகள் மரபு, புதுமை எண்ணங்கள், பெண் படைப்பாளர்கள்.

**முன்னுரை**

படைப்பிலக்கியம் புனைவதற்கான எழுதுகோலைப் பெண் எடுக்கத் தொடங்கிய டத்திலேயே ஆணாதிக்கக் கருத்தியல்கள் சமூகத்தில் நிலைபட்டுப்போய் வேர்விட்டு தழைத்துவிட்டன. அவற்றின் தாக்கங்கள் குடும்பத்தளத்தில் மட்டுமின்றிக் கலை, இலக்கியம், சமயம், அரசியல் என சமுதாயத்தின் பல தளங்களிலும் தமது சுவடுகளை அழுத்தமாகப் பதிக்கத் தொடங்கிவிட்டன என்பது வெளிப்படை படைப்புக்கப் பால் வேறுபாடு தேவையில்லை

*என்பர். எனினும் பெண்களின் பல்வேறு பிரச்சினைகளை நேரடியாகக் கண்டும். அனுபவங்களின் வாயிலாக உணர்ந்தும் படைப்பின் வழி வெளிப்படுத்துபவர்கள் பெண் படைப்பாளர்கள்*

*எழுபதுகளில் எழுதத்துவங்கிய பெண் கவிஞர்களில் முக்கிய திரிசடையும் மீனாட்சியும் ஆவார்கள். திரிசடையின் கவிதைகள் மரபு, சம்பிரதாயம், சடங்குகள் ஆகியவற்றைத் தன் வாழ்வின் ஒரு பகுதியாகக் கொண்ட பெண்ணின் ஆண்ம மிசாரணையாக காணப்படுகிறது. மீனாட்சியின் கவிதைகளில் அடையாளங் கரைந்த வேதாந்தத்தைக் காணமுடிகிறது. யதார்த்தத்தின் நிகழ்வுகளையும், அது சார்ந்த நெகிழ்வையும் தனது கூர்ந்த கவனிப்பால் கவிப்பொருள் ஆக்குகிறார் சுகந்தி சுப்ரமணியன்.*

*வத்சலாவின் கவிதைகள் கருத்துக்களின் மட்டத்திலே நின்று விடுகின்றன. சே. பிருந்தாவின் கவிதைகள் சிநேகிதமும் அது தரும் அவஸ்தைகளையும் மெல்லிய குரலில் பேசுகின்றன. இலர் பொதுவாகப் பெண்கள் தங்கள் படைப்பில் அணுகத் தயங்கும் சிலவற்றைப் பேசுகிற நோக்கில் இயல்பாக எழுதிச செல்கிறார். கல்பனாவின் கவிதைகளில் 'பெண்' என்ற முறையில் தன் மீது செலுத்தப்பெறும் அதிகாரங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பது குறித்த ஆற்றாமை காணப்படுகிறது. கிருஷாங்கனியின் கவிதைகள் கலவையான மொழியும், குழப்பமான உணர்வுகளும் உடையனவாய் இருக்கின்றன. ரேவதியின் கவிதைகளில் கவித்துவமான படிமங் களையும், கச்சிதமான மொழியையும் காண்கிறோம். பெருந்தேவியின் கவிதைகள் முதல் வாசிப்பில் பிடிபடாததொரு அந்நியத் தன்மை கொண்டதாகவே இருக்கிறது. மாலதியின் கவிதைகள் உலகின் மீத கூர்மையான பார்வையும், வார்த்தைகளின் மீது நுட்பமான கண்காணிப்பையும் கொண்டு விரிவான அனுபவத்தை தருவன. சல்மாவின் கவிதைகள் தனிமையைப் பறைசாற்றுகின்றன. மேற் குறிப்பிட்டவர்களைத் தவிர ரிஷி, இளம்பிறை, வெண்ணிலா, தாமரை, உமா மகேஸ்வரி முதலியோரும் தொடர்ச்சியாக கவிதைகள் எழுதி வருகின்றார்கள்.*

*பெண்கள் வாழ்க்கையில் புதுமை எண்ணங்கள் முழுவீச்சு பெறவேண்டும் என்ற எண்ணத்தில் உருவான*

***மறுபடி மறுபடிக்***

***கழுவி மெழுகி***

***மறுபடி மறுபடி***

***சமைத்து சமைத்து***

***சுமந்து தளர்ந்து***

***மறுபடி ஓடி***

***மறுபடி ஓய்ந்து***

***மகளே.... என் மகளே***

***இதுவா என் வாழ்க்கை***

*என்ற ஆண்டாள் பிரியதர்ஷினியின் கவிதை பெண்கள் பற்றிய கண்ணோட்டத்தை எடுத்துக் காட்டுகிறது.*

**பெண் சிசுக் கொலை**

*அன்று முதல் இன்று வரை ஆண் பிறப்பை சுகமாகவும், உன் குழந்தையைச் சுமையாகவும் கருதுகின்றனர். தமிழகத்தின் வேறு இடங்களில் பெண் சிசுக்கொலை இன்று பரவலாகக் ப்படுகிறது. எருக்கம்பால் கள்ளிப்பால். நஞ்சு முதலியன பெண் தக்கொலைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. "மங்கையராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்" எனக் கவிமணி பாடினார். அந்நிலை மாறி,*

**"இங்கு**

**ஆணாகப் பிறப்பதே**

**லாட்டரிச் சீட்டு"**

*என நிர்மலா சுரேஷ் குறிப்பிடுகிறார். (மண்ணின் பதியும் பாதங்கள், 4.18)*

**வரதட்சிணைக் கொடுமை**

*வரதட்சிணையால் வாழ்க்கையே வணிகமாவிவிட்ட கொடுமை. இது பெண்களின் உள்ளுணர்வைப் பெரிதும் பாதிக்கின்றது. ஒரு கணவனை அடைய விலை கொடுக்க வேண்டிய நிலை பெண் களுக்கு உள்ளது. வரதட்சிணைக் கொடுமையை எண்ணிய ஒரு பெண்ணின் உணர்வாக*

**"வரதட்சணை கறைபட்ட**

**உன் கைகளால்**

**நீ எடுக்கும் கயிறுகூட**

**எனக்குக் கறுப்பாய்த் தெரியும்" *(எந்தன் தோழா , ப. 22)***

*என்ற வரிகளால் சுபத்ரா வெளிப்படுத்துகிறார்.*

**இல்லறத்தில் பெண்களின் நிலை**

*குடும்பப் பெண்கள் இயந்திரம் போல் உழைக்கின்றனர். பெண் குடும்பத்தில் மகளாக, மனைவியாக, தாயாக, பாட்டியாக இருந்து பல்வேறு பொறுப்புகளைச் சுமக்கிறாள்."*

**"இல்லற ராஜ்ஜியத்தில்**

**பூஜ்ஜிக்கப்படும் மனைவியும் உண்டு**

**பூஜ்ஜியமாக்கப்பட்ட மனைவியும் உண்டு**

**முதலாமவள் கால்பகுதி**

***அடுத்தவள் முக்கால் பகுதி”***

*எனும் பொன்மணி வைரமுத்துவின் வரிகள் சமூகத்தில் இல்லறப் பெண்களின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.*

*சல்மா என்கிற பெண் கவிஞரின் “பச்சைத் தேவை” பெண்ணியக் கருத்துக்களையும், சிந்தனைகளையும் உள்ளடக்கியதக இருக்கிறது. இந்நூலில் கவிஞர் பெண்ணிய கருத்தாக்கங்களையும், பெண்ணியச் சிக்கல்களையும் தடைகளைத் தாண்டி மிகத் துரிச்சலுடன் மண்வாசனை மாறாமல் புலப்படுத்துகிறார். சாதாரணப் பெண் கவிஞர்கள் சொல்லக்கூசும் அஞ்சும் பெண்ணியக் கருத்துக் களை மிகத் துணிச்சலோடு சல்மா வெளிப்படுத்தியிருக்கிறார். பெண்களின் பிரச்சினைகளை அலசுவதாகவும், பெண்ணின் உணவு களை வெளிப்படுத்துவதாயும், பெண்ணியத்தின் வளர்ச்சிப் பாதை களைச் சுட்டுவதாகவும் அவர் எழுத்துக்கள் காணப்படுகிறது.*

**என் இசைத்தட்டுகள்**

**ஓயும் ஒவ்வொரு வேளையிலும்**

**வந்து சேர்கிறது என்னிடமே**

**அது எப்போதும்**

**இந்த நெருப்பைக் கடந்து கொண்டிருக்கிறது**

**ஒரு பூச்சியின் ஆவேசத்துடன்**

*எனும் பெண்ணுரிமைக்கான கருத்துக்களைச் சல்மா வெளிப்படுத்துகிறார்.*

*பெண் ஆணிலிருந்து வேறுபட்டு அறியப்படுவது அவளின் உடலால் தான். அவளது உடலின் உள்ளார்ந்த உணர்வுகளே புனைவு பெற்றவை.*

கதைக்கு அவர்கள் எப்போதும் எனது உடலையே நோக்குபவர்

கணவன் தொடக்கம் கடைக்காரன் வரைக்கும்

இதுவே வழக்கம் .

*என்ற 'அவர்கள் (ஆண்கள்) பார்வையில்' எனும் சங்கரியின் கவிதையில்*

*ஆணாதிக்கச் சமூகம் பெண்ணை ஓர் நுகர்வும் பொருளாகப் பயன்படுத்திய நிலை சுட்டிக் காட்டப்பெறுகிறது.*

*பெண்கள் தங்களுக்குரிய உரிமைகள் எது என்பதைக்கூட அறிய முடியாத நிலையில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அச்சம், மடம், நாணம் என்ற சமுதாயக் கற்பிதங்களுக்கு உட்பட்ட இரண்டாந்தர குடிமகளாக, அடிமைகளாக இருக்கின்ற பெண்களின் நிலையை மித்ரா,*

***“ அச்சம், மடம், நாணம் என்னும் அறியாமைக் காரிருளில்,***

***அனுதினமும் ஆழ்ந்து அஞ்சியும் கெஞ்சியும்,***

***ஆமைபோல் பதுங்கியும் அலைக் கழிக்கும் பெண்மை"***

*(காற்றின் சிறகுகள், ப. 48)*

*எனும் வரிகள் மூலம் எடுத்துரைக்கிறார்.*

*பெண்கள் ஆண்கள் ஆட்டுவிக்கும் ஆட்டத்திற்கு ஏற்றவாறு அந்திரத்திலாடும் பட்டங்களாய் இருக்கும் அடிமை நிலையை அவர்,*

***"ஆடவர்கள்***

***ஆட்டுவிக்கும்***

***ஆட்டத்திற் கேற்ப***

***அந்திரத்தி லாடும்***

***அலங்காரப் பட்டங்கள்"***

*(திலகபாமா, சூரியனுக்கும் கிழக்கே, ப. 85)*

*என்று பாடுகின்றார். திலகபாமா வரதட்சணைக் கொடுமையால் முதிர் கன்னிகளாகி விடும் பெண்களின் நிலையும், பெண்ணடிமைத் தனத்தினையும் கண்டித்து கவிதைகளில் பாடுகிறார். மேலும் திருமண வாழ்க்கையில் பெண்கள் படும் பாட்டையும் பாடுகிறார்.*

*இல்லத்தில் இருக்கக்கூடிய பெண்கள், இல்லத்தில் இருக்கக் கூடிய இயந்திரங்களோடு இயந்திரமாய் வாழ்கின்றனர். இதனையே சுகந்தி சுப்பிரமணியன் தமது 'பெண்' என்னும் கவிதையில்,*

***'வீடு***

***நாற்காலி***

***சுவர்கள்***

***மேஜை***

***கடிகாரம்***

***நாட்காட்டி***

***இவற்றுடன் ஒரு பெண் யந்திரம்'***

*என்கிறார்.*

*வீட்டிலுள்ள மேசை, நாற்காலி, சுவர், கடிகாரம், நாட்காட்டி இவற்றோடு பெண்களில் பலரும் இயந்திரங்களாய் உள்ளனர் என்கிறார். அடுக்களை வாசிகளாய்ப் போய்விட்ட பெண்களின் நிலையை,*

***என்றைக்கேனும் ஒருநாள்***

***நான் காணாமல் போய்விட்டால்***

***அடுப்படியின் பரணிலோ***

***சிலிண்டரின் மறைவிலோ தான்***

***முதலில் தேடுவார்கள் போலும்!***

*என்ற வரிகளின் வாயிலாக எடுத்துரைக்கிறார்.*

***ஒரு நாளேனும்***

***வாழ வேண்டும்***

***நான் நானாக!***

*என்ற வரிகள் பெண்கள் தங்கள் உணர்வுகளை உண்மையாய் வெளிப்படுத்தி வாழ விரும்பும் தன்மையை எடுத்துரைக்கிறார்.*

*பெண் பிறந்த வீட்டில் இருக்கும் பருவத்தில் தந்தை சொல்படி இயங்கும் குடும்ப அமைப்பு முறை நாட்டில் காணப்படுகிறது. அதனால் அப்போது கூட உரிமை இல்லை என்பதை,*

***'அப்பா சொன்னாரென***

***பள்ளிக்குச் சென்றேன்***

***தலைசீவினேன், சில***

***நண்பர்களைத் தவிர்த்தேன்***

***சட்டை போட்டுக்கொண்டேன்***

***கல்யாணம் கட்டிக்கொண்டேன்***

***…………………………..***

***காத்திருக்கிறேன்***

***என்முறை வருமென்று"***

*(கனிமொழி, கருவறை வாசனை, ப. 17)*

*எனக் கனிமொழி குறிப்பிடுகிறார்.*

*பெண்கள் அனுபவிக்கும் துன்பங்களை எடுத்துரைக்கும் திலகபாமா பெண்கள் பயணிக்க வேண்டிய வழித்தடத்தையும் சுட்டுகிறார். ஒருதலை பட்சமாக இயங்கும் சமூகத்தை உடைத்தெறிந்து விட்டு பெண்கள் புதிய பறவையாய்ப் பிறப்பெடுத்து உலாவர வேண்டு மென்பதை,*

***சோலைகளையும் பாலைகளையும்***

***வசந்தங்களாக்குதலை***

***வாழ்வாய்க் கொண்டபடி***

***தீர்மானிக்கப்பட்ட எல்லைகளைத் தாண்டி***

***தீர்மானங்களைக் கைகளில் தாங்கி***

***உதிர்ந்த இறகுகளின் அடியில்***

***உயிர்த்தெழும் புதிய சிறகுகளோடு***

*என்ற தம் கவிதை வரிகளால் பெண்கள் அடைய வேண்டிய | விழிப்புணர்ச்சியைப் பாடுகிறார். பெண்களின் நிலையைக் கவிஞர் பத்மாவதி தாயுமானவர்,*

***'பெண்' என்றால் அடங்கு என்றும்***

***ஆண் என்றால் அடக்கு என்றும்***

***பிறக்கையிலேயே***

***நாக்கில் தேனைத் தொட்டு வைக்கிறார்கள்'***

*எனப் பெண்களின் அடிமை நிலையை உணர்த்துகிறார்.*

*குழந்தையாக இருக்கும்போதே பெண் குழந்தைகளுக்கான இயல்புகள் திணிக்கப்படுகின்றன என்பதை,*

***"கீரைக்காரி வந்தால்***

***அம்மாவைக் கூப்பிடவும்***

***செய்தித்தாள் வந்தால்***

***அப்பாவிடம் கொடுக்கவும்***

***யாரும் சொல்லித்தராமலேயே***

***கற்றுக் கொள்கிறது குழந்தை"***

*என்ற வெண்ணிலாவின் கவிதை காட்டுகிறது. மேலும் எவ்வாறு சமூக மனப்பயிற்சி ஆண், பெண் என்ற நிலைப்பாடுகளாகக் குழந்தை மனத்திலேயே விதைக்கிறது என்று காட்டுகிறது.*

*ஆணாதிக்கச் சட்டங்களை எதிர்க்கப் புறப்பட்ட பெண் புல களாகச் சீறும் தன்மை சில பெண் கவிஞர்களிடம் காணப்படுகிறது கட்டமைக்கப்பட்ட சுமைகளின் அழுத்தத்திலிருந்து விடுபட்டு சுதந்திரத்திற்குப் பயணம் செய்ய விழையும் மனம் வெளிப்படுகிறது.*

***'ஏறிக்கொண்டிருக்கும் வயதிற்கும்***

**இழந்து கொண்டிருக்கம் இளமைக்கும்**

**கோரிக் கொண்டிருக்கிறார்கள்**

**வரதட்சணையாக ஒரு வரம்'**

என்று வருந்தும் பத்மாவதி தாயுமானவர், வரதட்சிணை கேட்கும் ஆதிக்கச் சமுதாயத்தை எதிர்த்துப் போராடத் தூண்டுகிறார்.

**முடிவுரை**

பிறப்பு முதலே பெண்கள் பாலின வேறுபாடு காரணமாக. சமுதாயத்தில் வளர்க்கப்படுவதையும், பருவ வயதில் ஏற்படும் உடலின் மாற்றத்தால் உளவியல் ரீதியாகப் பாதிப்பையும், மன அமைதியின்மையும் பெறுகின்றனர். சமுதாயம் பெண்களை பாலினரீதியான முறையில் அடிமைப்படுத்துகிறது. பெண்கள் தனது தேவை, விருப்பு வெறுப்பு, நம்பிக்கை, பலம், பலவீனம், இன்பம், துன்பம், உயர்வு, தாழ்வு, எளிமை, பிறநிலை முதலியவற்றை அறிந்து கொள்ளவேண்டும். முயற்சிகளே முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்லும் என்பதை பெண்ணியக் கவிஞர்களின் கவிதைகள் எடுத்துக் காட்டுகின்றன.

**துணை நூல்கள்**


*1. கனிமொழி, **கருவறைவாசனை**, சென்னை 2004.*

*2. சங்கரி, **பறத்தல் அதன் சுதந்திரம்** , கிருஷ்ணாங்கிணி, பதிப்பகம், சென்னை.*

*3. சல்மா, **பச்சை தேவதை,** உயிர்மை பதிப்பகம், சென்னை.*

*4. சுகந்தி சுப்பிரமணியன், **மீண்டெழுதலின் ரகசியம்,** யுனைடெட் ரைட்டாஸ், சென்னை.*

*5. பிரம்மராஜன், சிவகுமார் ஆர் (ராதா). **அவ்வை மண்ணில் பெண் எழுத்தாளர்கள்.,** மதுரா, சென்னை 2001.*

*6. இரவி, இரா. **விழிகளில் ஹைக்கூ,** செயச்சித்ரா வெளியீடு, மதுரை,2003.*

*7. இரவி, இரா. **நெஞ்சத்தில் ஹைக்கூ**, செயச்சித்ரா வெளியீடு, மதுரை, 2007*

*8 . இரவி, இரா. **கவிதைச் சாரல்,** செயச்சித்ரா வெளியீடு, மதுரை, 1997.*

*9. ஞானி, **படைப்பிலக்கியம்**, 5 காவ்யா பதிப்பகம், சென்னை, 1999.*

*10. மோகன், இரா, **இலக்கிய அலசல்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997.*

*11. .லீலாவதி, தி. **இதுதான் ஹைக்கூ**, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1990.*